# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 184 | புதன்கிழமை Wednesday | 30.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


### அக்டோபர் 11ந்தேதி நடைபெறும் மெட்ரோ ரெயில் சேவை தொடக்க விழாவில்

# பிரதமர் மோடியும், முதலமைச்சர் விஜயும் ஒன்றாக ரெயிலில் பயணம் செய்ய திட்டம்



பிரதமர் மோடி மற்றும் முதல்-அமைச்சர் விஜய் ஒன்றாக ரெயில் பயணம் செய்வது தொடர்பான தகவல் வெளியாகி உள்ளது.

சென்னையில் 118.9 கிலோ மீட்டர் தொலைவுக்கு 3 வழித்தடங்களில் 2-ம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டப்பணிகள் நடந்து வருகின்றன. இதில்,கலங்கரை விளக்கம் -பூந்தமல்லி வரையிலான வழித்தடத்தில் (26 கிலோ மீட்டர்) வட பூந்தமல்லி - போரூர் வரையிலான 10 கிலோ மீட்டர் தொலைவுக்கு பணிகள் முடிந்து மெட்ரோ ரெயில் சேவையை தொடங்குவதற்கான பாதுகாப்பு சான்றிதழை ரெயில்வே வாரியம் வழங்கியது.

இதேபோல, போரூர் பழனி இடையில் அனைத்துப்பணிகளும் முடிவடைந்து கடந்த ஜனவரிமாதம் 11-ந்தேதி வெற்றிகரமாகசோதனை ஓட்டம் நடத்தி பார்க்கப்பட்டது.

அப்போது, சிக்னல் அமைப்பு, தண்டவாள செயல்திறன், ரெயில் இயக்கம், உறுதித்தன்மை உள்ளிட்டவைகள் பரிசோதிக்கப்பட்டன.இதனால்,பூந்தமல்லி - வடபழனி இடையில் மெட்ரோ ரெயிலை இயக்குவதற்கான அனைத்து சோதனை பணிகளையும் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் முடித்தது. இதனை தொடர்ந்து, ரெயில்வே பாதுகாப்பு கமிஷனர் இவ்வழித்தடத்தில் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் இவ்வழித்தடத்தில் ரெயிலை இயக்குவதற்கான ஒப்புதலும் கிடைத்தது.

பிரதமர்துவக்கிவைக்கிறார்

கடந்தபிப்ரவரிமாதமே பூந்தமல்லி - வடபழனி வரையில் மெட்ரோ ரெயில் சேவை தொடங்கப்படும்எனஎதிர்பார்க்கப்பட்டது. ஆனால், சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் தரப்பில் பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட நிகழ்ச்சி தேதிக்கான அனுமதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டு வந்தது. இதனால், அனைத்து பணிகள் முடிந்த நிலையிலும் பூந்தமல்லி - வடபழனி இடையேமெட்ரோ ரெயில் சேவையை தொடங்குவதிலும் கால தாமதம் ஏற்பட்டது.

இந்த நிலையில், வரும் அக்டோபர் 11-ந்தேதி பூந்தமல்லி - வடபழனி இடையிலான மெட்ரோ ரெயில் சேவையை பிரதமர் மோடி தொடங்கி வைக்க இருப்பதாக சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் சென்னை ஐ.ஐ.டி.யில் நடைபெறும் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி கலந்து கொள்கிறார். அப்போது, 3 தேசிய நெடுஞ்சாலை திட்டப்பணிகளையும், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் திட்டப்பணிகளையும் தொடங்கி வைக்கிறார்.

இதன்பின்னர், பூந்தமல்லி -வடபழனி இடையிலான மெட்ரோ ரெயில் சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்து, மெட்ரோ ரெயிலில் பயணம் செய்ய உள்ளார். மெட்ரோ ரெயில் சேவை தொடக்க விழாவில், பிரதமர் மோடி,முதல்-அமைச்சர் விஜய் ஆகியோர் ஒரே மேடையில் கலந்து கொள்ள இருக்கின்றனர்.

ஒன்றாக ரெயில் பயணம்

இதேபோன்று, பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ ரெயில் சேவையை பிரதமர் மோடி தொடங்கிவைத்து, தமிழ்நாடு முதல்-அமைச்சர் விஜய் உடன் இணைந்து பூந்தமல்லியில் இருந்து வடபழனி வரை மெட்ரோ ரெயிலில் பயணம்செய்ய திட்டமிடப்பட்டு உள்ளது என தகவல் தெரிவிக்கின்றது.

2-ம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்தில் பூந்தமல்லி -வடபழனி வழித்தடம் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு வரும் முதல் சேவை ஆகும். மொத்தம் 14.64 கிலோ மீட்டர் தூரத்தில் 11 உயர்மட்ட மேம்பாலங்கள் அமைந்துள்ளன. இச்சேவை பயன்பாட்டுக்கு வரும்போது பூந்தமல்லி - வடபழனி இடையே போக்குவரத்து நெரிசல் பெருமளவில் குறையும் என மெட்ரோ ரெயில்வே உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

வடபழனியில் தொடங்கி போரூர் சந்திப்பு, போரூர் பைபாஸ், தெள்ளியகரம், காட்டுப்பாக்கம், குமணன்சாவடி, கரையான்சாவடி, முல்லைத்தோட்டம், பூந்தமல்லி, பூந்தமல்லி பைபாஸ்ஆகிய 11வழித்தடங்கள் இதில் இடம்பெறும் என்று கூறப்படுகிறது.

# “2 நாளில் 9 கொலைகள்... ரீல்ஸ் ஆட்சியை யாருக்காக நடத்துகிறார் முதல்வர் விஜய்?” எதிர்கட்சி தலைவர் உதயநிதி கேள்வி



சென்னை: "தமிழகத்தில் கொத்துக் கொத்தாக கொலைகள் நடந்து கொண்டிருக்க, யாருக்குமே பாதுகாப்பற்ற இந்த ரீல்ஸ் ஆட்சியை யாருக்காக நடத்துகிறார் முதல்வர்?" என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளப் பக்கத்தில், "பட்டப்பகலில் இரட்டைக் கொலை உட்பட 2 நாட்களில் 9 கொலைகள் நடந்துள்ளது. என்ன செய்கிறார் டம்மி முதல்வர்?

திருநெல்வேலியில் டால்டன் மற்றும் நிக்கோலஸ் என அண்ணன் தம்பி இருவர் பட்டப்பகலில் குத்திக் கொல்லப்பட்டுள்ள சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை ஐஸ் ஹவுஸில் கஞ்சா விற்பதில் ஏற்பட்ட போட்டியில் அஜித் என்னும் இளைஞரை ஒரு கும்பல் வெட்டிக் கொலை செய்துள்ள கொடூரமும் அரங்கேறியுள்ளது.

குற்றத்தைத் தடுக்க வேண்டிய காவலர்களுக்கும் இந்தஆட்சியில் பாதுகாப்பு இல்லை என்பதற்கு சாட்சியாக,பரமக்குடியில் பெண் காவலர் கண்ணகி, கீழே தள்ளிவிடப்பட்டு உயிரிழந்து இருக்கிறார். இது தவிர,மயிலாடுதுறை - திருவண்ணாமலை -சேலம்-கன்னியாகுமரி - தேனி கூடலூர் என கடந்த 2 நாட்களில் மட்டும் 9 கொலைகள் நடந்து இருக்கின்றன.

இப்படி கொத்துக் கொத்தாக கொலைகள் நடந்து கொண்டிருக்க, யாருக்குமே பாதுகாப்பற்ற இந்த ரீல்ஸ் ஆட்சியை யாருக்காக நடத்துகிறார் முதல்வர்?

இனியும் மிக்சர் சாப்பிட்டுக் கொண்டிருக்காமல் சட்டம் - ஒழுங்கை நிலைநாட்ட முதல்வர் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, கனிமொழி எம்.பி வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில், "சென்னை ஐஸ் ஹவுஸ் பகுதியில் அஜித் என்ற இளைஞர், வீட்டு வாசலில் பெற்றோரின் கண் முன்பே வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். தமிழகத்தில் உணவுப் பொருட்களின் விலையும்,கொலையும்தான் அன்றாடம் போட்டி போட்டுக் கொண்டு உயர்ந்து கொண்டிருக்கின்றன.

திமுகவை விமர்சிக்க ஸ்கிரிப்டை மனப்பாடம் செய்வதில் காட்டும் அக்கறையை முதல்வர் விஜய், தன்வசமுள்ள காவல் துறையைச் செயல்படுத்துவதில் காட்டியிருந்தால் இதுபோன்ற சம்பவங்களைத் தடுத்திருக்கலாம். இனியாவது செய்வாரா?" என தெரிவித்துள்ளார்.


செய்திகள் உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt


# தமிழகத்தில் தனியார் பஸ்கள் வேலைநிறுத்தம் வாபஸ்

தமிழகத்தில் மகளிர் பயணம் என்ற பெயரில் அரசு பஸ்களில் பெண்கள் இலவசமாக செல்லும் திட்டம் நடைமுறையில் உள்ளது. இந்த நிலையில் அக்டோபர் 2-ந்தேதி முதல் இந்த திட்டம் 'வெற்றிப்பயணம்' என்ற பெயரில் விரிவுபடுத்தப்படும் என்று சட்டசபையில் முதல்-அமைச்சர் விஜய் அறிவித்தார்.

அதன்படி மாநகர மற்றும் நகர்ப்புறங்களில் எக்ஸ்பிரஸ், எல்.எஸ்.எஸ்., டீலக்ஸ் மற்றும் புறநகர் சாதாரண அரசு பஸ்களிலும் பெண்கள் இலவசமாக பயணிக்கலாம். மாவட்டங்களுக்கு இடையே பயணம் செய்ய சாதாரண அரசு பஸ்களிலும் இலவசமாக பயணிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



அரசின் இந்த இலவச பயண திட்டத்தால் தனியார் பஸ் உரிமையாளர்கள் பாதிக்கப்படுவதாக கூறப்படுகிறது. இதுதொடர்பாக சென்னை சேப்பாக்கத்தில் தமிழ்நாடு தனி யார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்களின் சம்மேளன தலைவர் கே.தங்கராஜ், பொதுச்செயலாளர் டி.ஆர்.தர்மராஜ் ஆகியோர் கூட்டாக நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தனர். அவர்கள் கூறுகையில், தமிழக அரசு அறிவித்துள்ள 'வெற்றிப்பயண' திட்டத்தால் மாநகர,நகர மற்றும் சாதாரண புறநகர் பஸ்களில் பெண்கள் இலவசமாக பயணிப்பார்கள். இதன்மூலம், தனியார் பஸ்கள் நஷ்டம் அடைந்து மேற்கொண்டு இயக்க முடியாத சூழ்நிலை உண்டாகும். மேலும், இத்தொழிலை சார்ந்துள்ள 3 லட்சம் குடும்பங்கள் பாதிக்கப்படும்.

அரசு போக்குவரத்து கழகங்களுக்கு இலவச மகளிர் பயணத் திட்டத்திற்காக அரசு சார்பில் மானியம் வழங்கப்படுகிறது. எனவே, தனியார் பஸ்களிலும் பெண்கள், திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளை இலவசமாக பயணிக்க அனுமதிக்க வேண்டும். அதற்கு நஷ்டஈடாக தனியாருக்கும் மானியம் வழங்க வேண்டும்.

தனியார் பஸ் தொழிலை காப்பாற்றும் வகையில் பஸ் கட்டணத்தை உயர்த்தியும், மகளிர் இலவச பயணத்தை எங்களுக்கும் விரிவுபடுத்தி மாற்றியமைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இக்கோரிக்கையை வலியுறுத்தி நாளை (புதன்கிழமை) ஒரு நாள் கவன ஈர்ப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ளோம். அதன்படி, இன்று நள்ளிரவு 12 மணி முதல் நாளை நள்ளிரவு 12 மணி வரை இந்த வேலை நிறுத்தம் நடைபெறும். எனவே நாளை தனியார் பஸ்கள் ஓடாது என்று தெரிவித்து இருந்தனர்.

இந்தநிலையில்,இன்று நள்ளிரவு முதல் நாளை நள்ளிரவு வரை நடைபெறுவதாக இருந்த தனியார் பேருந்து உரிமையாளர்கள் வேலை நிறுத்தம் வாபஸ் பெறப்பட்டுள்ளது. இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில், அச்சு மற்றும் தொலைக்காட்சி ஊடகங்கள் நேற்று நடைபெற்ற எங்களது பேட்டி மற்றும் எங்களது கோரிக்கைகளை தங்களது ஊடக வாயிலாக பொது மக்களுக்கு கொண்டு சென்றமைக்கு எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

# பெரும்பாக்கம் ஊராட்சியில் மற்ற கட்சியை விட தவெக அதிகபடியான வாக்குகள் பெருவேன் வேட்பாளர் மரகதம் குமரவேல் பேச்சு



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டசபை தொகுதிக்குட்பட்ட, அச்சிறுபாக்கம் ஒன்றியம், பெரும்பாக்கம், ஊனமலை, சிறுநல்லூர், மொறப்பாக்கம், வைப்பணைபகுதியில்,த.வெ.க., வேட்பாளர் மரகதம் குமரவேல் அவர்கள்,

' மதுராந்தகம் தொகுதிக்கு உட்பட்ட வீட்டுமனை பட்டா இல்லாத நபர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க நடவடிக்கை எடுப்பேன், ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினராக கிராமங்களின் அனைத்து அடிப்படை தேவைகளையும் நிறைவேற்றி தருவேன், எனக் கூறி வாக்காளரிடையே தீவிர ஓட்டு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது, த.வெ.க., வேட்பாளர் மரகதம் குமரவேல்கூறியதாவது:

மதுராந்தகம் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் வீட்டுமனை பட்டா இல்லாத நபர்களுக்கு வீட்டுமனை வழங்க நடவடிக்கை எடுப்பேன் .

2021 முதல் 2026வரை எதிர்கட்சி சட்டமன்ற உறுப்பினராக ரேஷன் கடை, அங்கன்வாடி மையம், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, கலையரங்கம், சாலை வசதிஉள்ளிட்டவளர்ச்சி திட்ட பணிகள், மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி உள்ளேன்.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கும்,தளபதிவிஜய்அவர்களின் ஆட்சியின் காரணமாக மக்கள், விசில் சின்னத்திற்கு அமோக ஆதரவளித்து வருகின்றனர். மகிழ்ச்சியாக உள்ளது.

பெரும்பாக்கம் ஊராட்சி பகுதியில் எதிர்க்கட்சி உறுப்பினர்களை விட கூடுதலாக வாக்குகள்பெற்றுவெற்றி பெறுவேன்.

மதுராந்தகம் இடைத்தேர்தலில் விசில் சின்னத்திற்கு வாக்களித்து அமோக வெற்றி பெற செய்ய வேண்டும் என, வாக்காளரிடையேகேட்டுக் கொண்டார்.

பின், தண்டரை புதுச்சேரி, மாத்தூர், அபிராமிபுரம், கூடலூர், கோழியாளம், செண்டிவாக்கம், கழனிப்பாக்கம், ஒரத்தூர் உள்ளிட்ட பிரச்சாரம்மேற்கொண்ட இடங்களில் பொதுமக்கள் மற்றும் மகளிரின் குறைகளை கேட்டு அறிந்து, விசில் சின்னத்தில் வாக்களித்து, பெருவாரியான ஓட்டு வித்தியாசத்தில் வெற்றிபெறசெய்ய கூட்டணி கட்சியினர் ஈடுபட வேண்டும். என்று இவ்வாறு கூறினார் .

இந்நிகழ்வில், செங்கல்பட்டுகிழக்குமாவட்ட செயலர்பாலாஜி மற்றும் கூட்டணி கட்சி மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக, மகளிர் அணி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மதுராந்தகம் சட்டசபை தொகுதி, பெரும்பாக்கம் பகுதி உமாசங்கர்ஏற்பாட்டில்,சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது, வேட்பாளர் மரகதம் குமரவேல் வாக்காளர்களிடம் தீவிர ஓட்டு சேகரிப்பில் ஈடுபட்டார்.

உலக இருதயதினத்தை முன்னிட்டு, கோவை பந்தயசாலையில் உள்ள

# சிஎஸ்ஐ தேவாலயம் முன்பாக இருதய நுரையீரல் புத்துயிர்ப்பு சிகிச்சை விழிப்புணர்வு நிகழ்ச்சி

## இந்த நிகழ்ச்சியில் கோவை மாவட்ட ஆட்சியர் பங்கேற்ப்பு



கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை சார்பாக, செப்டம்பர் 29ம் தேதி, உலக இருதய தினம் 2026 எனும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியின் வாயிலாக இருதய- நுரையீரல் புத்துயிர்ப்பு சிகிச்சை என்று அழைக்கப்படும் சிபிஆர் விழிப்புணர்வு நிகழ்ச்சி கோவை பந்தய சாலையில்உள்ளசிஎஸ்ஐ தேவாலயம் முன்பு நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையின் நிர்வாக அறங்காவலர் டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன், மற்றும் கோவை மாவட்ட ஆட்சியர் பவன் குமார் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை துவக்கி வைத்தனர். மேலும் ஸ்ரீ இராமகிருஷ்ணா மருத்துவமனையின் தலைமை செயல் அதிகாரி சி.வி.ராம் குமார் ,தலைமை நிர்வாக அதிகாரி மகேஷ் குமார், மருத்துவ இயக்குநர் ராஜகோபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சி யில்.. 2026 உலக இருதய தினத்தின் கருப்பொருளாக "டோன்ட் மிஸ் ய பீட் " என்ற அடிப்படையின் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் திடிர் மாரடைப்பு அல்லது இருதய நிறுத்தம் ஏற்படும் சூழ்நிலைகளை அடையாளம் கண்டு அவசர நிலைகளில் விரைவாக செயல்பட்டு, சிபிஆர் வழங்குவதால், பாதிக்கப்பட்டவர்களின் உயிரை காக்க முடியும், என்றும் அதனை எவ்வாறு செய்ய வேண்டும் என்று செய்முறை விளக்கமும் அளிக்க பட்டது.

தொடர்ந்து சிபிஆர் அளிப்பதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் விழிப்புணர்வு நாடகமும் நடைபெற்றது. தொடர்ந்து இந்த நிகழ்ச்சி குறித்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய ஸ்ரீ இராமகிருஷ்ணா மருத்துவமனையின் நிர்வாக அறங்காவலர் சுந்தர் ராமகிருஷ்ணன் கூறியதாவது.. உயிரை காக்கும் சிபிஆர் நிகழ்ச்சி கோவையின் முக்கிய இடங்களில் இந்த வாரம் முழுவதும் இராமகிருஷ்ணா மருத்துவமனை சார்பாக நடத்த பட உள்ளது. குறிப்பாக பந்தய சாலை, கோவை சர்வதேச விமான நிலையம், ரயில் நிலையம், செம்மொழி பூங்கா,பி.ஆர்.எஸ் மைதானம், மற்றும் கோவை மாநகரில் உள்ள முக்கிய வணிக வளாகங்கள், உள்ளிட்ட இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது. மக்கள் அதிகமாக கூடும் இடங்களுக்கு நேரடியாக சென்று சிபிஆர் விழிப்புணர்வை கொண்டு செல்வதன் மூலம், சமூகத்தில் பல்வேறு தரப்பினரையும் சென்றடைந்து , விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இந்த முயற்சியின் நோக்கம், இதனை பர்ஸ்ட் ஹார்ட் பவுண்டேஷன் நெட்வொர்க் என்ற அமைப்புடன் இணைந்து இதனை செய்து வருவதாக அவர் தெரிவித்தார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் காந்தி நகர் பகுதியில் உள்ள அங்கன்வாடி மையம் (பால்வாடி பள்ளி) இந்த அங்கன்வாடி மையத்தின் முன்புறமுள்ள பேரூராட்சிக்கு சொந்தமான குட்டக்கரை என்று அழைக்கப்படுகின்ற இப்பகுதி அடர்ந்த காடு போல் காட்சியளிக்கிறது இந்த பகுதியில் பலர் மலம் கழித்தலும் குப்பைக் கழிவுகளை கொட்ட படுவதால் அங்கன்வாடியில் உள்ள குழந்தைகளுக்கு நோய் தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளது மற்றும் இப்பகுதி அடர்ந்து காணப்படுவதால் இதன் அருகில் பெண்களுக்கான கழிப்பறை வசதி உள்ளது இரவு நேரங்களில் இந்த பகுதியில் சில மர்ம நபர்கள் வந்து செல்வது போல் பெண்களுக்கு அச்சம் ஏற்படுகிறது எனவே இந்த பகுதியை பேரூராட்சி நிர்வாகம் உடனடியாக சுத்தம் செய்து தருமா??? மீண்டும் குப்பை கொட்டுதலோ மலம் கழித்தலோ ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்குமா ?? என்று காந்திநகர் பொதுமக்களால் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

# உலக இதய தினத்தை முன்னிட்டு விஜிஎம் மருத்துவமனை சார்பாக, உலக இதய தின விழிப்புணர்வு பேரணி

## மாநகராட்சி ஆணையர் கொடியசைத்து துவக்கி வைத்தார்




நாடு முழுவதும் செப்டம்பர் 29ஆம் தேதியை, உலக இருதயத்தனமாக கொண்டாடி வருகின்றோம் இந்த நாளில், இருதய நோய்கள் குறித்த விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுவதற்கும், தடுப்பு சுகாதாரத்தை ஊக்குவிப்பதற்கும், ஆரோக்கியமான இதயம் மற்றும் சிறந்த வாழ்க்கை முறையை பின்பற்றுவதற்காகவும், கோவை சிங்காநல்லூர் பகுதியில் உள்ள விஜிஎம் மருத்துவமனை சார்பாக, உலக இதய தின விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. கோவை பந்தய சாலை பகுதியில் உள்ள சிஎஸ்ஐ தேவாலயத்தின் முன்பாக துவங்கிய இந்த பேரணி, பந்தய சாலையில் உள்ள மீடியா டவர் பகுதியில் நிறைவு பெற்றது. இதனை கோவை மாநகராட்சி ஆணையர் கட்டா ரவி தேஜா கொடியசைத்து துவக்கி வைத்துடன், தானும் நடந்து இது குறித்து விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தினார். இந்த பேரணியில் சுமார், 300க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ மாணவியர்கள், சுமார் கலந்து கொண்டு இருதயம் குறித்து, விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், பதாகைகளை ஏந்தி ஊர்வலமாக சென்று, பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இருதய விழிப்புணர்வு குறித்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய விஜிஎம் மருத்துவமனையின் தலைவர் வி.ஜி மோகன் பிரசாத் செய்தியாளர்களிடம் கூறியதாவது.. மாரடைப்பு, பக்கவாதம், மற்றும் பிற முக்கிய இதய நோய்கள் கவலைக்கிடமாக அதிகரித்து வருகின்றது. மேலும் இவை வாழ்வின் உச்சகட்டத்தில் இருக்கும் இந்தியர்களை பெருமளவில் தாக்குகின்றது. இதய நோய்கள் அமைதியான கொலையாளிகள் போல உருவாகி வருகின்றது. நீரிழிவு நோய், உடல் பருமன், உயர் ரத்த அழுத்தம், மற்றும் இயல்புக்கு மாறான கொலஸ்ட்ரால், ஆகியவை இதய நோய்களுக்கான அறிகுறியாக அமைந்து விடுகின்றது. எனவே உலக இதய தினத்தை முன்னிட்டு கோவையில் இதயம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த பேரணி நடத்தப்பட்டது, இதனை கோவை மாநகராட்சி ஆணையர் கட்டா ரவி தேஜா கொடியசைத்து துவக்கி வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் விஜிஎம் மருத்துவமனையின் மருத்துவர்கள், சுமன், மதுரா பிரசாத் சுமன், வம்சி மூர்த்தி, மித்ரா பிரசாத், தர்மராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கோவையில் ஜூவல் ஒன் நிறுவனத்தில் 9 காரட், 14 காரட் மற்றும் 18 காரட் தரத்தில் தங்க நகைகள் விற்பனைக்கு அறிமுகப்படுத்தியது



நாள்தோறும்வளர்ச்சி பெறும் இந்த நிறுவனத்தின் வளர்ச்சியே வாடிக்கையாளர்கள் தரும் பேராதரவு.

அத்தகைய வாடிக்கையாளர்களை மகிழ்விக்கும் வகையில், ஜூவல் ஒன் நிறுவனம், கோவை ஈச்சனாரி பகுதியல் உள்ளஇரத்தினம்அரங்கில் பிரமாண்ட இசை நிகழ்ச்சியை முன்னெடுத்தது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள, வாடிக்கையாளர்கள் சுமார்5000பேரை அழைத்து அவர்களுடன் இந்த இசை நிகழ்ச்சியை முன்னெடுத்தது. இந்த நிகழ்ச்சியில் தனியார் தொலைக்காட்சி புகழ் ஸ்ரீதர்ஷனா, ஸ்ரீநிஷா, பிரியங்கா, பரத், லைனெட், உள்ளிட்ட பல்வேறு பிரபலங்கள் பங்கேற்று பாடல்கள் பாடியும் நடனங்கள் ஆடியும் கொண்டனர். நிகழ்ச்சியின் இடையியே வாடிக்கையாளர்கள் குலுக்கல் முறையில் தேர்வு செய்யபட்டு, தங்க நாணயங்கள், வெள்ளி நாணயங்கள் வழங்க பட்டது. இந்த நிகழ்ச்சியின் வாயிலாக செய்தியாளர்களை சந்தித்து பேசிய எமரால்டு ஜூவல் இன்டஸ்டிரி நிறுவனத்தின் தலைவரும்நிர்வாகஇயக்குநருமான சீனிவாசன் கூறியதாவது.. கடந்த 12 ஆண்டுகளாக எங்களது வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த வாடிக்கையாளர்களுக்கு நன்றி கூறும் விதமாக இந்த நிகழ்ச்சியை முன்னெடுத்து உள்ளோம், இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வாடிக்கையாளர்களையும்மகிழ்ச்சியாக்க வேண்டும் என்று இந்த இசை இரவு எனும் நிகழ்ச்சியை நடத்தியதாக தெரிவித்தார்.

மேலும் சமீபத்தில் கோவை க்ராஸ் கட் சாலையில், பிளாகூஷிப் ஸ்டோர் என பிரமாண்ட ஜூவல்லரியை துவக்கியுள்ளதாகவும் இங்கு 5 தளங்களுடன், ஒவ்வொரு தளத்திலும் ஒவ்வொரு நகைகளை காட்சிபடுத்தி உள்ளதாக தெரிவித்தார். மக்கள் அதிக அளவில் 22 காரட் ஆனால் தங்கத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் தங்கம் மீது பற்றுள்ள வாடிக்கையாளர்களின் தேவையறிநுது தற்போது 18 காரட் நகைகளையும் அறிமுகப்படுத்தி உள்ளோம். 22 காரட் தங்கத்தின் விலையை விட கனிசமாக குறைந்து 18 காரட் நகைகளை வாடிக்கையாளர்கள் வாங்கி செல்வதாக தெரிவித்தார். மேலும்அனைத்து மக்களும் தங்கம் வாங்க வேண்டும் என்று, 9 காரட், 14 காரட் களின் தரத்திலும் நகைகள் உள்ளதாக தெரிவித்தார்.

கேரள மாநிலம் மூணாறில் நடைபெற்ற 30வது தேசிய அளவிலான சாம்பியன்ஷிப் போட்டிகளில்

# சிலம்பம், கராத்தே உள்ளிட்ட போட்டிகளில் பங்கேற்று 11 தங்கம், 4 வெள்ளி பதக்கங்களை பெற்ற கோவை மாணவர்கள்



கோவை கண்ணம்பாளையம் மற்றும் நடுப்பாளையம் பகுதியில் கடந்த 14 ஆண்டுகளாக எர்த் ட்ராகன் மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி, ஆதி தமிழன் சிலம்பாட்ட கலைக்கூடம், எனும் பயிற்சி மையம் செயல்பட்டு வருகின்றது. இதன் தலைமைபயிற்சியாளராக சென்சாய் நாக சுந்தரம், மாணவ மாணவியர்களுக்கு கராத்தே, சிலம்பம், உள்ளிட்டபல்வேறுபயிற்சிகளை வழங்கி வருகின்றார்.இங்குசுமார்400க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் சிலம்பம், கராத்தே உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் பெற்று வருகின்றனர். இவ்வாறு பயிற்சி பெறும் மாணவர்களின் திறனை அறியும் வகையில், இந்தியாவின் எந்த பகுதியில்,இத்தகைய தகுதி தேர்வு போட்டிகள் நடைபெற்றாலும் மாணவர்களை தயார் படுத்தி அவர்களை, அந்த போட்டிகளில் பங்கேற்க வைத்து பரிசுகளையும் பெற ஊக்கப்படுத்தி வருகின்றார். இதன் ஒரு பகுதியாக கேரள மாநிலம் மூணாறு பகுதியில்

ஸ்கூல் கேம்ஸ் அன்ட் அக்டிவிட்டி டெவலப்மென்ட் பவுன்டேஷன் சார்பாக, கடந்த 26ம் தேதி முதல் 28ம் தேதி வரை, 30வது தேசிய அளவிலான சாம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்றது. இதில் சிலம்பம், கராத்தே, பாக்சிங்,ஆர்ச்சரி,அத்லெட்டிக் உள்ளிட்ட போட்டிகள் நடைபெற்றது. இதில் கலந்து கொள்ள இந்தியாவின் பல்வேறு மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு, பாண்டிச்சேரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து 1500 மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர், 5 வயதில் இருந்து, 18 வயது மற்றும் அதற்க்கு மேல் உள்ளவர்களும் இந்த போட்டிகளில் கலந்து கொண்டனர். இதில் எர்த் ட்ராகன் மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி மாணவர்கள் 15 பேர் பங்கேற்றனர்.அதில் மொத்தமாக,11 தங்க பதக்கங்களும், 4 வெள்ளி பதக்கங்களும், சான்றிதழ்களும், கோப்பைகளும் பெற்று சாதனை படைத்தனர். இத்தகைய சாதனை படைத்த மாணவர்கள் சாலை மார்க்கமாக நேற்று இரவு கோவை வந்தடைந்தனர் அவர்களுக்குமலர்மாலைஅணிவித்தும், சால்வைகள் வழங்கியும், இனிப்புகள் வழங்கியும், மாணவர்களின் பெற்றோர்கள், ஊர் மக்கள் என பலரும் சேர்ந்து உற்சாக வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து இம்மையத்தில் பயிற்சி பெறும் மாணவர் கதிர்வேலின் தந்தை கார்த்திக் செய்தியாளர்களிடம் கூறியதாவது..

மாணவ மாணவியர்களின் தனித்திறன்களை மேம்படுத்த, எங்களது குழந்தைகளுக்குகராத்தே, சிலம்பம்,பாக்சிங்,யோகா, உள்ளிட்ட பயிற்சிகளை அளித்து வருகின்றோம். மாணவர்கள் இத்தகைய பயிற்சிகளை செய்து வருவதால், அவர்களின் கவனம் முழுவதும் இந்த விளையாட்டை சுற்றியே இருந்து வருகிறது. மொபைல் போன், டிவி, இன்டர்நெட் உள்ளிட்டவைகளை பயன்படுத்துவதை குறைத்து கொள்கிறார்கள். இதனால் இவர்கள் பள்ளி பாடத்திலும் அதிக மதிப்பெண்கள் பெறுகின்றனர்.இத்தகைய பயிற்சிகளை கற்று கொள்ள மாணவர்கள் பயிலும் பள்ளியான, பீடம்பள்ளியில் உள்ள,ஸ்ரீ சுகபிரம்ப மஹரிஷி வித்யா மந்தீர் இன்டர்நேஷனல் பள்ளி நிர்வாகம் எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர் பள்ளி நாட்களில் போட்டிகளில் கலந்து கொள்ள சிறப்பு அனுமதி அளித்து, பாடத்திட்டங்களையும் கற்க வைக்கின்றனர். எனவே இந்த வெற்றி என்பது குழந்தைகளை சுற்றி உள்ள அனைவரின் கூட்டு முயற்சி அதற்க்கு எங்களது மனமார்ந்த வாழ்த்துக்கள் என தெரிவித்தார்.

# ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு



ஈரோடு மாவட்டத்தில் எதிர்வரும் காந்தி ஜெயந்தி (02.10.2026) அன்று தினத்தை முன்னிட்டு அரசு மதுபானக் கடைகள், அதனுடன் இயங்கும் மதுக்கூடங்கள் மற்றும் எப்.எல்.1, எப்.எல்.2 மற்றும் எப்.எல்.3 மதுபான விடுதிகள்/ஹோட்டல்களில் உள்ள பார்கள் ஆகியவை மேற்கண்ட தினத்தில் மூடப்பட வேண்டும் எனவும், அன்றைய தினத்தில் மது விற்பனை இல்லாத நாளாக (Dry Day) அனுசரிக்க வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளதைத் தொடர்ந்து 02.10.2026 அன்று முழுவதும் ஈரோடு மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு மதுபானக் கடைகள், அதனுடன் இயங்கும் மதுக்கூடங்கள் மற்றும் எப்.எல்.1, எப்.எல்.2 மற்றும் எப்.எல்.3 மதுபான உரிமதலங்கள் மூடப்பட்டிருக்கும் என்றும் அன்றைய தினத்தில் மதுபான விற்பனைகள் ஏதும் நடைபெறாது என்றும், அன்றைய தினம் மது விற்பனையில் ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.



தமிழக வெற்றி கழக கோவை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சருமான சம்பத்குமார் தலைமையில் கோவை வடக்கு தொகுதி சாய்பாபா காலனி பகுதி கழகம் சார்பாக, கோவை மாவட்ட மாணவரணி இணை அமைப்பாளர் தேன் குமார், 45 ஆவது வார்டு செயலாளர் தமிழரசி குமார், கோவை பாஷா, பார்த்திபன் , காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் ரியாஸ் அஹமத், குட்டி ராஜ்குமார், மகேஷ், அபு, மற்றும் மகளிர் அணி, மாணவர் அணி, இளைஞரணி, அனைத்து நிர்வாகிகளும் தேர்தல் பரப்புரைக்காக கோவையில் இருந்து தாராபுரம் சென்றனர். முன்னதாக அமைச்சரை சந்தித்து வாழ்த்து பெற்றனர். மேலும் தாராபுரத்தில் தமிழக வெற்றிக்கழகம் சார்பாக போட்டியிடும், சத்யபாமாவுக்கு விசில் சின்னத்தில் வாக்கு சேகரிக்க சென்றனர்.

# தூத்துக்குடி இந்திராநகரில் புனித மிக்கேல் அதிதூதர் கெபி ஆலயத் திருவிழா கோலாகலம்

## மின் அலங்கார திருவுருவப் பவனியில் திரளான பக்தர்கள் பங்கேற்பு



தூத்துக்குடி ஜார்ஜ் ரோடு, இந்திராநகர் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள புனித மிக்கேல் அதிதூதர் கெபியின் ஆண்டு திருவிழா பக்தி சிறப்புடன் நடைபெற்றது.

தமிழக வெற்றிக் கழகத் தைவர் மற்றும் முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், கழகப் பொதுச்செயலாளரும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான ஆனந்த் வழிகாட்டுதலின்படியும், தூத்துக்குடி மத்திய மாவட்டச் செயலாளரும் மீன்வளத்துறைஅமைச்சருமான ஸ்ரீநாத் உத்தரவின்படியும், மாநில துணைச் செயலாளர் எஸ்.டி.ஆர்.சாமுவேல்ராஜ், மாவட்ட நிர்வாகி கிஷோர்,மாவட்ட இணை செயலாளர் கோல்டன் ஆகியோரின் ஆலோசனையின்படியும், தூத்துக்குடி ஜார்ஜ் ரோடு, இந்திராநகர் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள புனித மிக்கேல் அதிதூதர் கெபியின் ஆண்டு திருவிழாபக்திசிறப்புடன் நடைபெற்று வருகிறது.

ஆண்டு திருவிழா கடந்த செப்டம்பர் 19-ஆம் தேதி மாலை ஜெபமாலையுடன் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து உதவி பங்குத்தந்தை அருட்பணி. ஜெரி தலைமையில் திருக்கொடியேற்றம் நடைபெற்றது. பின்னர் சிறப்புத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருவிழாவை முன்னிட்டு தொடர்ந்து நடைபெற்ற நாட்களில் தினமும் மாலை ஜெபமாலை மற்றும் சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்றன.

இதன் தொடர்ச்சியாக, நேற்று 28-ஆம் தேதி மாலை சிறப்பு நற்கருணைஆராதனைநடைபெற்றது. அருட்பணி. செல்வம் தலைமையில் நடைபெற்ற இந்த ஆராதனையில், பாத்திமா நகர் பங்குத்தந்தை அருட்பணி. அந்தோணி சார்லஸ் முன்னிலை வகித்தார். இதில் இந்திராநகர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான இறைமக்கள் கலந்து கொண்டு பக்தியுடன் வழிபட்டனர்.

திருவிழாவையொட்டி ஆலய வளாகம் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் பக்தர்களின் வசதிக்கேற்ப பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. திருவிழா நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் மற்றும் இறைமக்கள் திரளாக கலந்து கொண்டு புனித மிக்கேல் அதிதூதரின் அருளை வேண்டி பிரார்த்தனை செய்து வருகின்றனர்.

மேலும், திருவிழாவின் அடுத்தடுத்த நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற உள்ளன. பக்தர்கள் அனைவரும் திருவிழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு இறையருளைப் பெறுமாறு விழாக்குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இத்திருவிழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தூத்துக்குடி மாநகர மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் பி.செல்வம் செய்திருந்தார். மேலும் புனித மிக்கேல் அதிதூதர் கெபி குழுவினர், மகளிர் குழுவினர் மற்றும் இந்திராநகர் பகுதி இறைமக்கள் இணைந்து சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர்.

நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாநகர மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் P.செல்வம்இணை அமைப்பாளர்A.ஜால்வின் CK.ஜூடு, எடிசன், M.வால்டர், R. ராஜா, மிக்கேல்சன், பிரதீபா,அநன்யா மேரி, சாரா, மற்றும் கோவில் நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தவெக வேட்பாளர் மரகதம் குமரவேலுக்கு ஊனமலை கிராமத்தில் தாய்வீட்டு சீர்வரிசையுடன் உற்சாக வரவேற்பு



செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தமிழக வெற்றி கழகத்தின் வேட்பாளர் மரகதம் குமரவேல், சிறுநாகலூர் ஊனமலை, மாத்தூர், செண்டிவக்கம், ஒரத்தூர் உள்ளிட்ட கிராமங்களில், தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார் .

அவ்வாறு , ஊனமலை கிராமத்தில் வாக்கு சேகரிக்க சென்ற வேட்பாளர் மரகதம் குமரவேலுக்கு , ஊனமலை ஊராட்சி மன்றதலைவர் ராஜாராமன் ஏற்பாட்டில், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ரவிச்சந்திரன் தலைமையில், தவெக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் மரகதம் குமாரவேலுக்கு, ஊனமலை கிராமத்தினர், பெற்ற மகளுக்கு தாய் வீட்டு சீர்வரிசை எடுப்பது போல், கிராம மக்கள் பட்டாசுவெடித்து, ஆரத்தி எடுத்து, மேளதாளம் முழக்க, பூக்கள் தூவி, ஆளுயுற மாலை அணிவித்து, உற்சாகமாக வரவேற்பு அளித்தனர்.

அப்போது பேசிய வேட்பாளர் மரகதம் குமரவேல் அவர்கள், தமிழக வெற்றி கழகத்தின் சாதனைகளை எடுத்து கூறி, பொதுமக்களிடையே வாக்கு சேகரித்தார்.

மேலும் ஊனமலை கிராமத்தில் நிறைவேற்றப்பட்ட மக்கள் நலத்திட்டங்களை எடுத்து கூறினார் . இதில் மதச்சார்பற்ற சமூக நீதி வெற்றி கூட்டணி சார்பில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



# தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உலக இருதய தின விழிப்புணர்வு பேரணி

## 100க்கும் மேற்பட்ட மருத்துவம், செவிலியர் மாணவர்கள் பங்கேற்பு

உலகஇருதயதினத்தை முன்னிட்டு தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்பில் இருதய நோய் மற்றும் இருதய ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு பேரணி மற்றும் சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் எபனேசர் ஜோயல் குமார் தலைமையில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை அவர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் தொடங்கிய பேரணி, நகரின் முக்கிய வீதிகள் வழியாகசென்று மீண்டும் மருத்துவமனை வளாகத்தை வந்தடைந்தது.

பேரணியில் 100-க்கும் மேற்பட்ட மருத்துவம் மற்றும்செவிலியமாணவர்கள் கலந்து கொண்டனர். இருதய ஆரோக்கியத்தின் முக்கியத்துவம், இருதய நோய்களைத்தடுப்பது,ஆரோக்கியமான வாழ்க்கை முறையை கடைப்பிடிப்பது உள்ளிட்ட விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு மாணவர்கள் கோஷமிட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இருதய மருத்துவத் துறை சார்பில் மருத்துவமனை வளாகத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. மூத்த இருதய மருத்துவ நிபுணர் டாக்டர் ஆர். பாலமுருகன் வரவேற்று பேசினார். ஆரோக்கியமற்ற உணவு மற்றும் வாழ்க்கை முறையால் ஏற்படும் இருதய நோய்கள் குறித்து செவிலிய மாணவிகள் நாடகம் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். டாக்டர் வெங்கடேஷ் நன்றி கூறினார்.

இந்த சிகிச்சைகள் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதே சிகிச்சையை தனியார் மருத்துவமனையில் மேற்கொள்ள சுமார் ரூ.3 லட்சம் வரை செலவாகும் என்றும் மருத்துவமனைதரப்பில்தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் இருதய நோய்கள் குறித்தவிழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டு, நோயின் அறிகுறிகள் தென்பட்டால் தாமதிக்காமல் உரிய நேரத்தில் மருத்துவமனையை அணுகி சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும் என மூத்த இருதய மருத்துவ நிபுணர் டாக்டர் பாலமுருகன் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் டாக்டர்கள் வெங்கடேஷ், சிவகுமார், விஷ்ணுதாஸ் உள்ளிட்ட இருதயமருத்துவத் துறை மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# மேகமலை, வருஷநாடு மலை கிராம மக்களுக்கு ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்நாடு விவசாயிகள் பாதுகாப்பு சங்கம்



ஸ்ரீவில்லிபுத்தூர் - மேகமலை புலிகள் காப்பகத்தை காரணம் காட்டி தேனி மாவட்டம் 98 மலை கிராம மக்களை வனத்துறை வெளியேற்றும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தும்

இந்தவிஷயத்தில்தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மறுசீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியும் உச்சநீதிமன்றத்தில் இந்த விவகாரம் தொடர்பாக வரவிருக்கும் விசாரணையை தங்களுக்கு சாதகமாக வரவேண்டும் என்று வலியுறுத்தியும்

கடந்த 26 ஆம் தேதி முதல் தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி தாலுகா கடமலைக்குண்டு பேருந்து நிலையத்தில் வருசநாடு சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த மலை கிராமமக்கள் இரவு பகலாக உணவு சமைத்து தொடர்ந்து காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்

போராட்டத்தின் நான்காவது நாளாக ஆயிரக்கணக்கான மலை கிராம மக்கள் கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்

இந்த நிலையில் இன்று நடைபெறும் வருசநாடு மலை கிராம மக்களின் காத்திருப்பு போராட்டத்திற்கு "தமிழ்நாடு விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தினர்" ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் கலந்து கொண்டனர்

போராட்டத்தில் பேசிய தமிழ்நாடு விவசாயிகள் பாதுகாப்பு சங்க மாநில தலைவர் ஈசன் முருக சாமி முல்லைபெரியாறு, காவிரி நீர் விவகாரத்தில் உச்சநீதிமன்றம் தீர்ப்பை செயல்படுத்த துணை ராணுவத்தை அனுப்ப உத்தரவிடாத நீதிமன்றம் இன்று மேகமலை, வருஷநாடு மக்களை வெளியேற்ற துணை ராணுவத்தை அனுப்ப கூறுகிறது உச்சநீதிமன்றத்தில் தீர்ப்பு அளித்தாலும் சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் சட்ட திருத்தம் செய்து நமது உரிமைய நிலைநாட்ட முடியும் தமிழக அரசும், மாநில அரசும் சட்ட திருத்தம் செய்து மலை கிராம மக்களின் உரிமைகளை காக்க வேண்டும் மேகமலை, வருஷநாடு மலை கிராம மக்களுக்கு பிரச்சினை என்று வந்தால் தமிழகம் முழுவதும் உள்ள 100 விவசாய சங்கங்களை திரட்டி தமிழ்நாடு முழுவதும் போராட்டம் நடத்துவோம் என தெரிவித்தார்



ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் தலைமையில் ஈரோடு மாநகராட்சி மாமன்ற கூட்ட அரங்கில் நேற்று (29.09.2026) செப்டம்பர் மாத மாமன்ற சாதாரண கூட்டம் நடைபெற்றது. உடன் ஆணையாளர் அர்பித் ஜெயின் , மண்டல தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட மாநகராட்சி உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற புனித மிக்கேல் அதிதூதரின் 364 வது ஆண்டு பெருவிழா

## மதுரை உயர் மறை மாவட்ட பேராயர் தலைமையில் ஆடம்பர கூட்டு திருப்பலி



தென்காசி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற திருத்தலமாகவும் அனைத்து மதத்தினராலும் சர்வேஸ்வரன் ஆலயம் என அழைக்கப்படும் இவ்வாலயத்தின் ஆண்டு பெருவிழாவானது கடந்த செப்டம்பர் 20ஆம் தேதி கொடி ஏற்றத்துடன் துவங்கி நடைபெற்று வந்தது. தினமும் காலையில் திருப்பலியும் மாலையில் ஜெபமாலை அதைத்தொடர்ந்து நவநாள் திருப்பலியும் நற்கருணை ஆசீரும் ஆலயத்தைச் சுற்றி அதிதூதரின் சப்பர பவனியும் நடைபெற்றது.தொடர்ந்து எட்டாம் நாள் நவநாள் அன்று மாலை புனித மிக்கேல் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் வைத்து திருப்பலியும் தொடர்ந்து நற்கருணை பவனியானது பள்ளி வளாகத்தில் இருந்து தொடங்கி நகரின் முக்கிய வீதிவழியாகவந்துதிருத்தலம்வந்தடைந்தது.தொடர்ந்து நற்கருணை ஆராதனை நடைபெற்றது. 9ம் ஆம் நாள் நவநாளில்பாளை மறைமாவட்ட மேனாள் ஆயர் மேதகு ஜூடு பால்ராஜ் தலைமையில் திருப்பலியும் அவருடன் இணைந்து அருட்பணி மரிய அந்தோணிஅடிகளார்,பாவூர்சத்திரம் பங்குத்தண்டை அருட்பணி சந்தியா கு அடிகளார், நெல்லை பேட்டை பங்குத்தந்தை அருட்பணி ஸ்டீபன் அடிகளார், மேலமெஞ்ஞானபுரம் பங்குத்தந்தை அருட்பணி. அல்போன்ஸ் அடிகளார் ஆகியோர் நிறைவேற்றினர். தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் மிக்கேல் அதிதூதரின் சொரூபம் வைக்கப்பட்டு பவனியானது நகரின் முக்கிய வீதி வழியாக வலம் வந்து மீண்டும் திருத்தலம் வந்தடைந்தது.

விழாவின் சிறப்பு அம்சமாக 10 நாள் நிகழ்வில் மதுரை உயர் மறைமாவட்டம் மேதகு பேராயர் அந்தோணி சாமி தலைமையில் ஆடம்பர கூட்டு திருப்பலியும் அவருடன் இணைந்து பாளை மறைமாவட்ட குருக்கள் இணைந்து நிறைவேற்றினர். திருவிழாவின் கடைசி நாளன்று காலையில் பாளையம் செட்டிகுளம் பங்குத்தந்தை அருட்பணி. ஜோமிக்ஸ் அடிகளார் தலைமையில் திருப்பலியும் தொடர்ந்து கொடியிறக்கமும் நடைபெற்றது.

இவ்விழாவில் அண்டை மாநிலமான கேரளாவில் இருந்தும்,தென்காசி,நெல்லை,நாகர்கோவில்,விருநகர், தூத்துக்குடி, ராம்நாடு உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து லட்சக்கணக்கானோர் கலந்து கொண்டனர். திருவிழா ஏற்பாடுகளை தென்காசி திருத்தல அதிபரும் பங்குத்தந்தையுமான ஜேம்ஸ் அடிகளார்,உதவிப்பங்குத் தந்தை ஜோசப் லாரன்ஸ் அடிகளார், களப்பணியாளர் சகோ. அண்டோ ஜோ லாரன்ஸ், அமலவை அருட்சகோதரிகள்,பங்கு பேரவையினர்,அன்பிய இறை சமூகத்தினர் சிறப்பாக செய்திருந்தனர். தென்காசி மாவட்ட காவல் துறையின் சார்பில் காவல் ஆய்வாளர் ராபட் ஜெயின் தலைமையில் சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# திருச்செந்தூர் கோவில் அறங்காவலர் குழு நியமனங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும்

## சித்ராங்கதன் ஆட்சியரிடம் மனு



* தூத்துக்குடி : திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அறங்காவலர் குழு நியமனங்களை தமிழக அரசு உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தூத்துக்குடி தெற்கு மாவட்ட பாஜக தலைவர் சித்ராங்கதன் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திருச்செந்தூர் கோவிலில் கடந்த காலங்களில் கூட்ட நெரிசல், அடிப்படை வசதிகள் மற்றும் பக்தர்களின் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் இருந்து வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், முந்தைய திமுக ஆட்சிக் காலத்தில் அறங்காவலர் குழுவில் பொறுப்பில் இருந்ததாகக் கூறப்படும்சிலருக்குமீண்டும்தற்போதுபொறுப்புகள் வழங்கப்பட்டிருப்பது குறித்து பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் கேள்விகள் எழுந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கோவில் நிர்வாகம் அரசியல் சார்பின்றி, பக்தர்களின் நலனைமையமாகக்கொண்டு செயல்பட வேண்டும் என்றும்,அறநிலையத்துறைஅதிகாரிகள் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு செயல்பட வேண்டும் என்றும் சித்ராங்கதன் வலியுறுத்தியுள்ளார்.

இதனால் தகுதி மற்றும் சட்ட விதிமுறைகளுக்கு உட்படாத நியமனங்கள் இருப்பின் அவற்றை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்றும், அறங்காவலர் குழு நியமனங்களை தமிழக அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இக்கோரிக்கைக்கு நடவடிக்கை எடுக்கப்படா விட்டால்,தூத்துக்குடி தெற்கு மாவட்ட பாஜக சார்பில் அறநிலையத்துறை அலுவலகத்தை முற்றுகையிட்டு ஜனநாயக முறையில் போராட்டம் நடத்தப்படும் என்றும் சித்ராங்கதன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# மதுராந்தகம் தவெக வேட்பாளர் மரகதம் குமரவேலை ஆதரித்து அமைச்சர்கள் ராஜீவ் மற்றும் ராஜ்குமார் தீவிர தேர்தல் பிரச்சாரம்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்றத்தொகுதி இடைத்தேர்தலில் மதசார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணி சார்பில் போட்டியிடும் தவெக வேட்பாளர் கே. மரகதம் குமரவேல், இன்று அச்சிறப்பாக்கம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட சிறுப்பேர்பாண்டி குடியிருப்பு

சிறுப்பேர்பாண்டி பள்ளிக்கூடம், பாபுராயன்பேட்டை,

கல்லியகுணம், பொற்பனங்கரணை, புரங்கால்,அன்னங்கல் உள்ளிட்ட பல்வேறு கிராமப் புறங்களில் கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுடன் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.அப்போது அவருக்கு ஆதரவாக வீட்டு வசதி துறை அமைச்சர் ராஜ்குமார் விசில் சின்னத்திற்கு வாக்களித்து பெரு வாரியான வாக்குகள் வித்தியாசத்தில் அவரை வெற்றி பெற செய்யுமாறு தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

அப்போது கல்லியகுணம் பகுதியில் கிராம பொதுமக்கள் மத்தியில் தவெக வேட்பாளர் மரகதம் குமரவேலை ஆதரித்து அமைச்சர் ராஜுவ், மாற்றுக் கட்சியினர் ஓட்டுக்கு 3ஆயிரம்,5ஆயிரம் கொடுப்பாங்க,அவர்கள் கொடுக்கும் பணத்தை வாங்குக்கொள்ளுங்கள்,அப்பணம் தங்களுக்கு தீபாவளி செலவுகளுக்காக உதவி அளிக்கும் எனவும்,ஆனால் அவர்களிடத்தில் பணத்தை பெற்றுக் கொண்டு தங்களது ஓட்டினை மட்டும் தவெகவின் விசில் சின்னத்திற்கு போடுங்கள் அமைச்சர் ராஜ்குமார் கலகலப்பாக உரையாற்றினார்.மேலும்

ஆளுங்கட்சிக்கு ஓட்டு போட்டால் மட்டுமே சாலை வசதி,குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் உட்பட அனைத்து திட்டங்களை சட்டமன்ற உறுப்பினர் பெற்று தர முடியும் எனவே ஆளுங்கட்சி வேட்பாளாரக மரகதம் குமரவேலை ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் எனவும்,

நீங்கள் வாக்குப்பதிவு இயந்திரத்தில் விசில் சின்னத்திற்கு போடுங்கின்ற ஓட்டினால் விசில் சின்னம் உள்ள பட்டனே தேஞ்சு போகின்ற அளவிற்கு இருக்க வேண்டும் எனவும் அமைச்சர் வேண்டுகோள் விடுத்து பேசினார்.

இதேபோல் சுற்று சூழல் துறை அமைச்சர் டாக்டர் ராஜீவ்-வும் மரகதம் குமரவேலை ஆதரித்து தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

வேட்பாளர் செல்லும் இடமெங்கும் கிராம மக்கள் பட்டாசுகள் வெடித்தும், மலர்கள் தூவியும், பிரமாண்டமான மலர் மாலைகள் மற்றும்சால்வைகள் அணிவித்தும் உற்சாக வரவேற்பு அளித்தனர். மேலும், விசில் அடித்தும், பெண்கள் ஆரத்தி எடுத்தும் வேட்பாளருக்கு அமோக வரவேற்பு அளித்தனர்.

பிரச்சாரத்தின் போது தவெகவின் தேர்தல் வாக்குறுதிகள் குறித்தும், தவெக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு மக்கள் நலன் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும் வேட்பாளர் மரகதம் குமரவேல் கிராம பொதுமக்களிடம் எடுத்துரைத்து, விசில் சின்னத்திற்கு வாக்களித்து தன்னை பெரு வாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்து அவர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இதில் மதசார்பற்ற சமூக நீதி வெற்றி கூட்டணி விசிக சார்பில் மாவட்ட செயலாளர் அன்புச்செல்வன். தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்பருத்திக்குளம் சேகர் பாபராயன்பேட்டை ஊராட்சி மன்ற தலைவர் நவநீதம். ஒன்றிய செயலாளர் பன்னீர்செல்வம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# உளுந்தூர்பேட்டை அருகே உள்ள நகர் பழைய விமான ஓடுதளத்தில் அனுமதியின்றி கூழாங்கல் கடத்திச் சென்ற 2 டிப்பர் லாரிகள் பறிமுதல்

உளுந்தூர்பேட்டை பகுதியில் உரிய அனுமதியின்றி கூங்கக்கல் டிப்பர் லாரிகளில் கடத்தப்பட்டு வருவதாக கள்ளக்குறிச்சி மாவட்ட புவியியல் மற்றும் கனிமவளத்துறை அதிகாரிகளுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் கள்ளக்குறிச்சி புவியியல் மற்றும்கனிமபலத்துறை அலுவலர் ரகுநாத் குமார் தலைமையிலான தனிப்படையினர் உளுந்தூர்பேட்டையை அடுத்த நகர் பழைய விமான ஓடுதளப் பகுதியில்வாகனதணிக்கையில் ஈடுபட்டனர்.

அப்பொழுது அந்த வழியே வந்த இரண்டு டிப்பர்லாரிகளை தடுத்து நிறுத்திய போது அதன் ஓட்டுனர்கள் லாரிகளை நிறுத்திவிட்டு தப்பி ஓடினர் இதையடுத்து லாரிகளில் அதிகாரிகள் சோதனை செய்த பொழுது அதில் உரிய அனுமதியின்றி 7 யூனிட் கூழாங்கற்கள் கடத்திச் சென்றது தெரிய வந்தது மேலும் கூழாங்கல் கடத்திச் செல்லப்பட்ட ஒரு டிப்பர் லாரியின் பின்பக்கம் திமுக கொடி மற்றும் உதயசூரியன் சின்னம் வரையப்பட்டு இருந்தது.

இதையடுத்து இரண்டு டிப்பர் லாரிகளையும் பறிமுதல் செய்த புவியியல் துறை அதிகாரிகள் லாரிகளை உளுந்தூர்பேட்டை காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர் இதையடுத்து போலீசார் டிப்பர் லாரிகளின் பதிவு எண்களைக் கொண்டு வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் மேலும் தப்பி ஓடிய லாரி ஓட்டுநர்களையும் தேடி வருகின்றனர்.

# பேரம்பாக்கம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் செவ்வாப்பேட்டை அரசு ஆதித்ராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் நாட்டு நலப் பணி திட்ட முகாம் தொடக்கம்



திருவள்ளூர் மாவட்டம் செவ்வாப்பேட்டை அரசு ஆதிதிராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளி பதினோராம் வகுப்பு மாணவர்களுக்கான நாட்டு நலப் பணி திட்ட முகாம் 26.09.2026 தேதி முதல் 02.10.2026 தேதி வரை நடைபெறுகிறது அதன் தொடக்க விழா தலைமையாசிரியர் ஆர். வெங்கடேசன் தலைமையில் நடைப்பெற்றது,

பள்ளியின் நாட்டு நலப் பணி திட்ட முகாம் அலுவலர் மணிகண்டன் அனைவரையும் வரவேற்றார், ஆசிரியர்கள் ராமமூர்த்தி, கோகுல் ஆகியோர் முன்னிலை வகித்தனர் இதில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் அவர்கள் கலந்துக் கொண்டு முகாமை தொடங்கி வைத்து மாணவர்களிடையே பேசியதாவது

நீங்கள் கல்வியில்சிறந்த விளங்கினால் மட்டும் போதாது தன் ஒழுக்கத்திலும் கடமையிலும் பொது வாழ்விலும் சிறந்து விளங்கினால் தான் வாழ்க்கையில் அனைத்தையும் சாதிக்க முடியும் , ஆசிரியர் அனைவரும் திறமை வாய்ந்தவர்கள் நாங்கள் படிக்கின்ற காலத்தில் பொது தேர்வில் 45% விழுக்காடு தேர்ச்சி அடைவதே கேள்வி குறி இப்போது நம்பள்ளியில் 100% விழுக்காடு தேர்ச்சி என்பது மிகுந்த மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருக்கிறது அந்த அளவிற்கு கடினமாக உழைக்கின்றனர் இதை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் நீங்களும் உங்கள் குடும்ப சூழ்நிலையை உள்வாங்கிக் கொண்டு அரசு துறைகளில் பெரிய பெரிய அதிகாரிகளாக வர வேண்டும் என மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்

மேலும் பேரம்பாக்கம் அரசு மேல்நிலைப்பள்ளி பதினோராம் வகுப்பு மாணவர்களுக்கான நாட்டு நலப் பணி திட்ட முகாம் தொடக்க விழா தலைமையாசிரியர் வாபாலமுருகன் தலைமையில் நடைப்பெற்றது மாவட்ட நாட்டு நலப் பணி திட்ட அலுவலரும் பள்ளியின் நாட்டு நலப் பணி திட்ட முகாம் அலுவலர் கே.கேசவலு அனைவரையும் வரவேற்றார் இதில் சிறப்பு அழைப்பாளர்களாக மப்பேடு காவல் நிலைய ஆய்வாளர் ஜெவிநாயகம் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் பூண்டி வனசரகஅலுவலர் முனுசாமி ஆகியோர் கலந்துக்கொண்டு முகாமை தொடங்கிவைத்தனர் பின்பு ஆய்வாளர் ஜெ.விநாயகம் மாணவர்களிடையே பேசியதாவது மாணவர்களின் சமூக பணிகள் ஒழுக்கம் கல்வியின் அவசியம் போதை பொருள் பழக்கத்தால் சீரழியும் இளைஞர்கள் நிலை தன்னொழுக்கம் தால் விளையும் நன்மைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். எனது தந்தை கூலி வேலை செய்து என்னை படிக்கவைத்தார் நான் பத்தாம் வகுப்புவரைஎனதுசொந்த கிராமமான கொப்பூரில் படித்தேன் பிறகு மேல்நிலைக் கல்வியை திருமழிசை அரசு மேல்நிலையில் படித்தேன் எங்க கிராமத்திற்கும் பள்ளிக்கும் சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும் பேருந்து வசதி கிடையாது மிதிவண்டியில் சென்று தான் படித்தேன் பிளஸ் டூ தேர்ச்சி பெற்று பட்டாபிராம் இந்துக் கல்லூரியில் சேர்ந்து பட்டம் பெற்று ஓராண்டு தனியார் கம்பெனியில் பணியாற்றி பின்பு காவல்துறை உதவி ஆயவாளர் பதவிக்கு விண்ணப்பித்து தேர்வு எழுதி தேர்ச்சி பெற்று பணியில் சேர்ந்து இன்று காவல்துறை ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன் எனது தந்தை ஏழை கூலியாக இருந்தாலும் என்னை அடித்து ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வந்ததால் இன்று அரசு அதிகாரியாக உங்கள் மத்தியில் உரையாற்றுகிறேன். நீங்களும் ஒழுக்கத்தை கடைப்பிடித்து பணிரெண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்று கல்லூரியில் சேர்ந்து படிக்கும்போதே யு.பி.எஸ்.சி, குரூப் 1,குரூப் 2 குரூப் 4 உள்ளிட்ட வேலை வாய்ப்பிற்கான போட்டி தேர்விற்கு தயார் படித்துக்கொள்ள வேண்டும் நாங்கள் எல்லாம் பல கஸ்டங்களை அனுபவித்து இந்த நிலைக்கு வந்திருக்கிறோம் ஆனால் அப்படி இல்லை அரசு எல்லா சலுகைகளும் கொடுக்கிறது கஸ்டத்தை அறியாதவர்கள் நீங்கள் பொழுது போக்கு பல விதத்தில் உங்கள் மனநிலை மாறுகின்ற சூழல் எப்போதும் ஏற்பட்டு இருக்கிறது இந்த நிலையை மாற்றி உங்கள் மனநிலையை ஒருநிலைப்படுத்தி நம் குறிக்கோள் படிப்பு நமது இலக்கு வேலை என்ற அடிப்படையில் படியுங்கள் நம் வளர்ச்சி குறித்த சிந்தனைகளை மற்றவர்களுக்கு பரிமாறுங்கள் சமூகத்தின் வெற்றி நிச்சயம் இவ்வாறு மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்

# காலநிலை மாற்றம் குறித்து ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு பள்ளிகளில் பணிபுரியும் 130 ஆசிரியர்களுக்கான சான்றிதழுடன் கூடிய உண்டு உறைவிட சிறப்பு பயிற்சி முகாமினை கலெக்டர் ச.கந்தசாமி துவக்கி வைத்தார்






சேலம் மாவட்டம், ஏற்காடு டி.ஐ.ஒ.ரிசார்டில், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் சார்பில் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு பள்ளிகளில் பணிபுரியும் 130 ஆசிரியர்களுக்கான காலநிலை மாற்றம் குறித்த சான்றிதழுடன் கூடிய உண்டு உறைவிட சிறப்பு பயிற்சி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (29.09.2026)துவக்கிவைத்தார்.

ஈரோடு மாவட்டத்தின் முக்கியமான ஈரநிலப் பகுதிகளான வெள்ளோடு பறவைகள் சரணாலயம், சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் மற்றும் பல்லுயிர் பாரம்பரிய முக்கியத்துவம் வாய்ந்த நாகமலை குன்று, எலத்தூர் குளம் உள்ளிட்ட இயற்கை வளங்களை பாதுகாப்பதன் அவசியம் குறித்து எடுத்துரைத்தார். சங்ககால இலக்கியங்களில் மனிதர்கள் தங்களைச் சுற்றி வாழ்ந்த பல்வேறு உயிரினங்களுடன் இணைந்து வாழ்ந்ததற்கான பதிவுகள் காணப்படுகின்றன என்றும், இயற்கையையும் உயிரினங்களையும் பாதுகாத்து வாழ்ந்த நமது பாரம்பரிய வாழ்க்கை முறைகளை இன்றைய தலைமுறையினருக்கு எடுத்துச்செல்வதில் ஆசிரியர்களுக்கு முக்கியப் பங்கு உள்ளது என்றும் தெரிவித்தார். காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை எதிர்கொள்ளவும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்தவும் பள்ளி அளவில் பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், இயற்கை வளங்களை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் வலியுறுத்தினார்.

இச்சிறப்புபயிற்சி முகாம் நேற்று 29.09.2026 முதல் 01.10.2026 வரை மூன்று நாட்கள் நடைபெறுகிறது. இப்பயிற்சியின் மூலம் ஆசிரியர்களுக்கு காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு,பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் இயற்கை வளங்களை பாதுகாப்பதன் அவசியம் குறித்து பல்வேறு பயிற்சிகள் மற்றும் கள அனுபவங்கள் வழங்கப்படுகின்றன. இப்பயிற்சியில் பங்கேற்ற ஆசிரியர்கள் இந்தியதாவரவியல் அளவாய்வு களப்பயணம் மற்றும் சூழல் நடைப்பயிற்சியில் பங்கேற்று,இயற்கைச் சூழல், தாவரங்கள் மற்றும் பல்லுயிர் வளங்கள் குறித்து அறிந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், ஈரோடு மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர். இ.மான்விழி, ஈரோடு மாவட்ட உதவி இயக்குனர் (ஊரக வளர்ச்சி முகமை) M.பிரசன்னா, தமிழ்நாடு காலநிலைகல்விமுன்னெடுப்பு திட்ட ஒருங்கிணைப்பாளர் பி.எஸ்.அனிஷா, ஈரோடு சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர், பள்ளித் துணை ஆய்வாளர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை கந்தசாமிபுரத்தில் உள்ள மிகவும் பழமை வாய்ந்த நல்ல தண்ணி குளத்தை அப்பகுதியில் உள்ள குடியிருப்பு வாசிகள் பிளாஸ்டிக் கழிவுகளை கொட்டி ஆக்கிரமிப்பு செய்திருந்தனர் இதனால்சுகாதாரசீர்கேடுஏற்பட்டுள்ளதுஇந்தநிலையில்பிளாஸ்டிக்கழிவுகளைஅகற்றிகுளத்தைசீரமைக்கபொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர் அதனை ஏற்று நகர மன்ற தலைவர் திருநாவுக்கரசு கவுன்சிலர் செல்வகுமார் ரமேஷ் பாபு ஆகியோர் உளுந்தூர்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி நாட்டு நலத் திட்ட பணி மாணவர்களைக் கொண்டு இன்று குலத்தை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டனர் 25 மாணவர்களை கொண்ட நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் குளத்தில் இருந்த பிளாஸ்டிக் குப்பைகள் மற்றும் கழிவுகளை அகற்றி தூய்மை பணிகளை மேற்கொண்டனர் தொடர்ந்து குலத்தை சுற்றி நகர மன்ற தலைவர் திருநாவுக்கரசி மற்றும் நகராட்சி ஊழியர்கள் மரக்கன்றுகளை நட்டு வைத்தனர்...

# உளுந்தூர்பேட்டை அருகே நெல் மூட்டைகள் ஏற்றி வந்த லாரி கவிழ்ந்து விபத்து - அதிர்ஷ்டவசமாக உயிர்த்தப்பிய ஓட்டுநர்



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே, சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையிலகெடிலம் அருகே சென்னையில் இருந்து நெல் மூட்டைகளை ஏற்றிக்கொண்டு திருச்சி நோக்கி லாரி ஒன்று சென்று கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக லாரியின் முன்பக்க டயர்

திடீரென வெடித்தது ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த லாரி, சாலையின் மையத் தடுப்பில் இருந்த பாதுகாப்பு இரும்புத் தகடுகள் மற்றும் மின்விளக்கு கம்பத்தை உடைத்துக்கொண்டு சாலையில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் லாரியை ஓட்டி வந்த மேல்மருவத்தூர் பகுதியைச்சேர்ந்ததமிழ் என்பவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

விபத்து குறித்துதகவல் அறிந்த திருநாவலூர் காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, விபத்துக்குள்ளானலாரியில்இருந்த நெல் மூட்டைகளை மாற்று வாகனத்தில் ஏற்றி வருகின்றனர் தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்ட போக்குவரத்து பாதிப்பை காவல்துறையினர் சீரமைத்தனர்.

# Assam Rifles jawan dead, 4 others injured in militant attack in Arunachal Pradesh



An Assam Rifles jawan died and four others were reportedly injured after a patrol team came under a suspected militant attack along the India-Myanmar border in Arunachal Pradesh's Changlang district on Tuesday morning, officers said.

The deceased has been identified as Havildar Jankhokai Kuki (42).

Changlang superintendent of police Kirli Padu said he received information about the incident and directed the officer-in-charge of Changlang police station to gather details.

"We have received information about the incident that occurred along the IMB (India-Myanmar Border) and have asked the OC of Changlang police station to collect all information related to it," the SP said. The incident occurred around 6.30am near Nampong Nallah under Nampong Circle when personnel of the 21 Assam Rifles were patrolling an area where border fencing work was underway, officers said.

Preliminary reports suggest that suspected militants opened fire on the patrol team, killing one jawan and injuring four others. The injured personnel were evacuated for medical treatment while further details regarding their condition remain awaited.

Security forces have intensified operations in the area following the incident, officers said. Details of the attack and an official statement from the Assam Rifles are awaited.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.